Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 313

புதன்கிழமை
05 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## சிமெந்தின் விலை குறைவு

கொழும்பு, ஒக். 5
50 கிலோ நிறையுடைய சிமெந்து பைக்கற்றின் விலை நேற்று நள்ளிரவு முதல் 100 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

15 ➤

## ஜெனிவா பிரேரணை சவாலாக அமையாது!



### அமைச்சர் விஜயதாஸ நம்பிக்கை

**கொழும்பு, ஒக்ரோபர் 5**

**ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கை மீதான புதிய பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது அரசுக்குச் சவாலாக அமையாது என்று நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

15 ➤

இந்த அரசாங்கம் நீடித்தால்

## சர்வதேச ஆதரவை முற்றாக இழப்போம்

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 5
இந்த ஆட்சி நீடித்தால் ஜெனிவாவில் இலங்கைக்கு 6 நாடுகள் மட்டுமல்ல எந்தவொரு நாடும் ஆதரவு வழங்க முன்வராது. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பின்றி இலங்கை அநாதையாகும் நிலையே ஏற்படும் - இவ்வாறு

15 ➤

## ஜெனிவாவில் தலைகுனிவு ராஜபக்சக்களே காரணம்!

### வாசுதேவ குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 5
ஜெனிவாவில் இன்று இலங்கை கூனிக்குறுகி நிற்க ராஜபக்சக்களே முழுக்காரணம் - இவ்வாறு அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியின் நாடாளு

15 ➤

## பைத்தியக்காரர்களிடம் சிக்கியுள்ளது சு.கட்சி!

### விளாசுகிறார் சந்திரிகா

கொழும்பு, ஒக். 5
நாட்டின் ஆட்சியையே தீர்மானித்த சுதந்திரக் கட்சி இன்று பைத்தியக் காரார்கள் சிலரின் கை களிலேயே உள்ளது. இதற்கு விரைவில் முடிவு கட்டியே தீருவேன் - இவ்வாறு சுதந்திரக் கட்சியின் முன்னாள்

15 ➤

## அரசாங்கத்துக்கு எதிராக மாணவர்கள் பெரும்போர்!

### பொலிஸாரின் பலப்பிரயோகத்தால் நேற்று மாலை வரை களனியில் பதற்றம்

கொழும்பு, ஒக். 5
அரசாங்கத்துக்கு எதிராக களனியில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் இணைந்து நேற்றுப் பெரும்

15 ➤



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நியூஸிலாந்துத் தூதுவர் மைக்கல் ப்பிள்ரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (அ-ம-27)




## திருவடிநிலை கடலில் மிதந்து வந்த சடலம்!



யாழ்ப்பாணம், ஒக். 5
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவடி நிலை கடற்பரப்பில் ஆணொருவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

15 ➤



## இயற்பியலுக்கான நோபல் மூவருக்குப் பகிர்ந்தளிப்பு!


கொழும்பு, ஒக். 5
கடந்த வருடத்துக்கான நோபல் பரிசில்கள் தற்போது அறிவிக்கப்பட்டு வரும் நிலையில், இயற்பியலுக்கான நோபல் பரிசில் மூன்று விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 ➤

## நாடாளுமன்றத்தில் நாளை ரணில் உரை!

கொழும்பு, ஒக். 5
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல்வேறு முக்கியமான விடயங்கள் குறித்து நாளை வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றவுள்ளார்.

15 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உதயன் பத்திரிகை தலைமை அலுவலகத்தில் நேற்று நவராத்திரி விழா சிறப்புற நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு பண்ணிசை நிகழ்வை வழங்கினர். நிர்வாக இயக்குநர், உதயன் பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ)

## சிறப்புப் பட்டிமன்றம்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இன்று புதன்கிழமை திக்கம் மத்திய சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பண்டிதர் சைவப்புலவர் பொன். சுகந்தன் பட்டிமன்றத்துக்குத் தலைமை வகிக்கவுள்ளார் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## திறன்திரை தொகுதி மகாஜனவில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் திறன்திரைத் தொகுதி திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக அதிபர் ம.மணிசேகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

# அடுத்தாண்டு ஆரம்பத்தில் 8,000 ஆசிரியர்கள் நியமனம்

**கொழும்பு, ஒக்.5**

**2023ஆம் ஆண்டு தொடக்கத்தில் 8 ஆயிரம் ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

இது தொடர்பான தேர்வுகள் ஏற்கனவே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் நடைபெற்று வருகின்றன. ஆசிரியர்களாக விரும்புகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கேற்ப திறமைப் பரீட்சையின் பின்னர் மாகாண அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

அத்தகைய ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள் தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கற்பித்தல் முறைகளில் டிப்ளோமாவை முடிக்கவேண்டும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் 8 ஆயிரம் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகளை நடத்தவுள்ளோம். அடுத்தாண்டு தொடக்கத்தில் அவர்களுக்கு நியமனங்களை வழங்கமுடியும். அதன்பின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வயது வரம்புமின்றி அகில இலங்கை ரீதியில் பரீட்சை நடத்தவுள்ளோம். மதிப்பெண்களைப் பொறுத்து, நேர்முகத் தேர்வின் மூலம் அவர்கள் மாகாண மட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். பயிற்சிக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்த கோரிக்கை எழுந்துள்ளது. இந்தக் கோரிக்கை தொடர்பான ஆரம்ப நிலை கலந்துரையாடல்களை முடித்துவிட்டோம். முன்மொழிவு வரைவு மற்றும் அமைச்சரவைப் பத்திரம் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. ஆசிரியர் கல்விக்கான பல்கலைக்கழகம் அமைப்பதே எங்கள் திட்டம். அதற்காக 19 பயிற்சிக் கல்லூரிகளையும் ஒருங்கிணைக்கலாம். அதன் ஸ்தாபனத்துடன் அதிகமான பாடங்களை உள்ளடக்குவதற்கு இது எங்களுக்கு உதவும்.

ஒருவருட பயிற்சியின்போது இளங்கலைப்பட்டதாரிகள்மூன்று வருட தத்துவார்த்த வெளிப்பாட்டைப் பெறுவார்கள். எனவே 4 வருடங்களின் பின்னர் எமக்கு நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் கிடைப்பார். பல்கலைக்கழக மானியக் குழுவினால் வழங்கப்பட்ட அளவு கோல்களின்படி விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்-என்றார். (எ-இ)



## தடை செய்யப்பட்ட பொருள்களுடன் ஒருவர் கைது!

வவுனியா, ஈரட்டைப் பகுதியில் தடை செய்யப்பட்ட பொருள்களுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று ஈரப் பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, யாழ்ப்பாணத்திலிருந்து வத்தளைக்குப் பயணம் செய்த கன்ரர் ரக வாகனத்தை ஈரட்டைப் பகுதியில் வழிமறித்து சோதனையிட்ட போது இந்த கைது நடவடிக்கை இடம் பெற்றது.

வாகனத்தில் 3 ஆயிரத்து 800 கிலோ மஞ்சள், 250 மில்லிலீற்றர் 519 கிருமிநாசினி மருந்துப் போத்தல்கள் ஆகியவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 43 வயது நபர் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-14-110)

# பகலில் வீடு உடைத்து 6 பவுண் நகை திருட்டு


## அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 5

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்று உடைக்கப்பட்டு 6 பவுண் நகை திருட்டுப்போயுள்ளது என வீட்டு உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அராலி மத்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளோர் இறப்பு வீட்டுக்குச் சென்ற வேளை வீட்டின் முன்கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் 6 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-125)

# நீர்மட்டத்தை அளவு செய்யக் கோரிக்கை

சாவகச்சேரி, ஒக். 5

காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு புனரமைக்கப்பட்ட வாய்க்கால் ஊடாக வெளியேறும் நீர்மட்டத்தை அளவு செய்து தரகமநல சேவைகள் பணியகம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என நுணாவில் மேற்கு விளைவேலி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட விளைவேலி வாய்க்கால் கடந்த மாதம் விவசாயிகளால் புனரமைக்கப்பட்டது.

காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் நீர்மட்டம் அளவு செய்யப்பட்டு பின்னரே வயல்களில் உழவு வேலைகளை மேற்கொள்ள முடியும்.

இதுதொடர்பில் அதிகாரிகளுக்கு பலதடவைகள் முறையிடப்பட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஆகவே, மழைகாலம் ஆரம்பிக்கும் முன் கமக்கார அமைப்பினர் இதுதொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெற்றுப்பிரேரணையும் நமக்கு வாய்த்த பிரதிநிதிகளும்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை இன்னும் சில தினங்களில் வரவிருகின்றது. இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு வருமானால் இலங்கைக்கு ஆதரவு வழங்கக்கூடிய நாடுகளின் எண்ணிக்கை சொற்பமே என்று கூறப்படுகின்றது. இதனால் இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நெருக்கடி ஏற்படும் என்றும் ஊகிக்கப்படுகின்றது. இலங்கைக்கான ஆதரவு இல்லாத நிலையில் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படலாம்.

பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அதனால் தமிழ் மக்களுக்கு ஆதாயம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் இலங்கைக்கு எதிரான இறுதித் தீர்மானம் மென்மையாக்கப்பட்டு, பொறுப்புக்கூறலுக்கான அழுத்தங்கள் குறைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ள நிலையில், இந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டாலும் கூட, தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படப்போவதில்லை என்பது வெள்ளிடை மலை.

மேற்கு நாடுகள் இலங்கையைத் தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருப்பதற்கு இந்தத் தீர்மானம் உதவப்போகின்றதே தவிர, தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான உந்துசக்தியாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. ஆரம்பத்தில் வலுவாக இருந்த இந்தப் பிரேரணை இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளால் மென்மையாகப்பட்டிருக்கின்றது என்று கொள்ளலாம். ஆனால், தமிழ் மக்கள் பக்கத்தில் இருந்து பிரேரணையை இறுக்கமாக்குவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.


தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தரப்புகள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு கடிதங்களை அனுப்புவதுடன் தங்கள் முயற்சிகளை நிறுத்திக்கொள்கின்றன என்றே கருதமுடிகின்றது. அவ்வாறு ஒன்றுக்கு மேல் ஒன்றாக அனுப்பப்படும் கடிதங்கள், கணக்கில் எடுக்கப்படுகின்றனவா என்பது கூடத் தமிழ் மக்களுக்கு தெரியாத நிலைமையே இருக்கின்றது. தமிழர் தரப்பில் இருக்கும் இந்த வெற்றிடத்தைப் பயன்படுத்தி, இலங்கை அரசாங்கம் காரியத்தைக் கனகச்சிதமாகச் செய்து முடித்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகளும் தமிழர் இனப்பிரச்சினையை முன்னிறுத்தி வாக்குப் பெறுவதுடன் நின்றுவிடுகின்றனர் அல்லது வாக்காக மாறக்கூடிய விடயங்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விடயத்திலும் கடிதங்களை அனுப்பி ஊடகங்களில் அவை வெளிவந்துவிட்டால் போதும் என்ற மனப்பான்மையுடனே அவர்கள் நடந்து கொள்கின்றனர் என்றே தோன்றுகின்றது. இது தமிழ் மக்களுக்கு எந்த விதத்திலும் பயனைத் தந்துவிடப்போவதில்லை.

தமிழ் மக்கள் உள்நாட்டில் தங்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று நம்பும் நிலையில், அடுத்த கட்டமாக சர்வதேசத்தையே நாட வேண்டியிருக்கின்றது. சர்வதேசத்தை நாடி இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைப் பெறும் முயற்சிகளுக்கு, தமிழ் மக்களின் அரசியல் தளம் மிகப் பலமாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆனால், இப்போதுள்ள அரசியல் தலைமைகளோ அதை உணர்ந்து செயற்படுபவர்களாக இல்லை. இந்தநிலைமை மாறி பற்றுறுதி மிக்கவர்களை மக்கள் தெரிவு செய்யும் வரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நாம் ஓரடி கூட நகர முடியாது என்பதுதான் யதார்த்தம்.

## நாளொரு நல்வார்த்தை

"வாழ்வில் இன்பமும், துன்பமும் பணத்தைச் சார்ந்தவை அல்ல. மனதைச் சார்ந்தவை."! - பெர்னாட்ஷா



# உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசு முயற்சி

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக்.5**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்ய நாட்டு மக்களுக்கு முழு உரிமையும் உண்டு. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும். இல்லாவிடின் நீதிமன்றம் செல்வோம்.**

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு நகரின் பல பகுதிகளை அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானியை ஜனாதிபதி நாட்டு மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இரத்துச் செய்துள்ளார். ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் அங்கீகாரம் இல்லாத காரணத்தால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பாதுகாப்பு அம்சங்களைப் பலப்படுத்திக் கொள்கிறார். நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கமைய இந்த அரசாங்கத்தை வெகுவிரைவில் வீழ்த்துவோம். மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போட்டுள்ளதைப் போன்று அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலையும் பிற்போட பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலைவிரைவாக நடத்தும் அதிகாரம் மற்றும் பொறுப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எதிர்வரும் ஆண்டு முதல்காலாண்டில் நடத்தப்பட வேண்டும். இல்லாவிடின் நீதிமன்றம் செல்வோம் - என்றார்.

(எ-இ)

# கைதடி கொள்ளைச் சம்பவம் முறைப்பாடு கிடைக்கவில்லை!

## சாவகச்சேரி பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

நாவற்குழியில் பட்டப்பகலில் வீடு புகுந்து கொள்ளையிடப்பட்டது என்று தெரிவிக்கப்படும் நிலையில், அவ்வாறான சம்பவம் தொடர்பாகத் தமக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குழியில் உள்ள வீடொன்றில் பட்டப்பகலில் வீடு புகுந்து வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிப் பணம், பொருள்கள் கொள்ளையிடப்பட்டன என்று செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பில் உதயனிலும் செய்தி வெளியாகியிருந்தது.

இந்தநிலையில், இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அவ்வாறான சம்பவம் தொடர்பில் தங்களுக்கு இதுவரையில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். தமது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

நாளை
06.10.2022
வியாழக்கிழமை
புரட்டாதி - 19

சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம்: 01.32 - 03.02

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறப்பும் ஒற்றுமையும் தரும் விஜயதசமி



அம்பாளை வேண்டி கொண்டாடப்படும் பண்டிகைகளுள் மிக முக்கியமானது நவராத்திரி. பொதுவாக வருடத்துக்கு நான்கு முறை நவராத்திரி வரும் அதில் புரட்டாதி அமாவாசைக்கு பிறகு வரும் நவராத்திரியை பெரும் விழாவாகக் கொண்டாடுகிறோம். சோழர் காலத்தில் நவராத்திரி திருவிழா, அரச விழாவாகக் கொண்டாடப்பட்டது. நவராத்திரி நாள்களில் பகலில் சிவ பூஜை மற்றும் இரவில் அம்பிகை பூஜை செய்வது சிறப்பு என்று கூறப்படுகிறது.

சிவனை வழிபட தகுந்த விழா சிவராத்திரி, சக்தியை வழிபட தகுந்த விழா நவராத்திரி. நவராத்திரி சமயங்களில் அம்பாள் ஊசி மேல் அமர்ந்து தவம் செய்வதாக சொல்லப்படுகிறது, அந்தச் சமயங்களில் வீட்டில் கிழிந்த துணிகளை தைக்கக் கூடாது என்பது உறுதியான கட்டுப்பாடாக பின்பற்றப்படுகிறது. புரட்டாதி மாத வளர்பிறை பிரதமையில் தொடங்கி விஜயதசமியில் நவராத்திரி முடிகிறது.

"முதல் மூன்று நாள்கள் துர்க்கை வழிபாடும், அடுத்த மூன்று நாள்கள் இலட்சுமி வழிபாடும், இறுதி மூன்று நாள்கள் சரஸ்வதி வழிபாடும் இடம்பெறும்.

இராமாயணத்தில் வால்மீகி இராமன் இராவணனுடன் போரிட தகுந்த நாளாக புரட்டாதி தசமி அதாவது விஜயதசமியை குறிப்பிட்டதாக குறிப்பு உண்டு. இராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று தேவி பாகவதம் சொல்கிறது. ஸ்ரீராமர், விஷ்ணு, விசுவாமித்திரர், காளிதாசர், அபிராமிப் பட்டர், பிரம்மா, வனவாசத்தில் பாண்டவர்கள், நவராத்திரி பூஜைகள் செய்து அம்பிகையின் அருளுக்கு பாத்திரமானவர்கள் என்று புராணங்கள் சொல்கின்றன.

நவராத்திரி வழிபாடு பெண்களுக்கே உரியது. எல்லா வயதுடைய பெண்கள் நவராத்திரி வழிபாட்டில் ஈடுபடலாம். நவராத்திரி வழிபாட்டால் பெண் குழந்தைகளுக்கு கல்வியும், கன்னிகளுக்கு திருமண சுப நிகழ்வுகளும் கிடைக்கும் என்பது சிறப்பு. நவராத்திரி பூஜையின்போது வெறும் மாவினால் கோலமிடுவதை விட கட்டாயம் செம்மண் கலந்து கோலமிட அம்பாள் மனமிரங்கி வருவாள் என்பது ஐதீகம்.



நவராத்திரி விழாவில் இரவு நேரத்தில் தான் பூஜை செய்யப்படும். இந்த பூஜை தேவர்கள் செய்வதாகக் கருதப்பட்டு இரவு நேரத்தில்தான் கொண்டாடப்படும். நவராத்திரி, விரதம் இருந்து கொண்டாடப்படும் பண்டிகையாகும். நவராத்திரியில் ஒன்பது நாளும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கியும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தாம்பூலம் வழங்கி வழிபட உறவுகள் மேம்படும் என்பது சிறப்பு. குழந்தைகளிடம் மனித நேயம் வளர பாலமாக நவராத்திரி அமைகிறது.

ஒன்பது நாள்கள் மகிஷன் என்ற அசுரனுடன் (மகிஷாசுரன்) போரிட்ட அன்னை பராசக்தி, பத்தாம் நாள் அசுரனை வென்றாள். இந்த நாளே விஜயதசமி.
அசுரனுடன் போரிட்டு வதைத்த தேவி சக்தியின் வெற்றியை தேவர்கள் யாவரும் கொண்டாடி மகிழ்ந்த திருநாள் விஜயதசமி.

விஜயதசமி என்பதற்கு மற்றொரு பொருளும் உண்டு. நவராத்திரியின் ஒன்பது நாள் விரதம் இருந்து தூய்மையான உள்ளத்துடனும், பக்தியுடனும் வணங்குபவர்கள் இல்லம்தேடி, பத்தாம் நாளான தசமி அன்று அன்னை விஜயமளிக்கும் நாளே 'விஜயதசமி' எனவும் கூறப்படுகிறது. நவராத்திரி பெருவிழாவின் ஒன்பதாம் நாளான மகாநவமி அன்று தொழில்களையும், கல்வியையும் மற்றும் கலைகளை போற்றும் விதமாகவும், அடுத்த நாள் வெற்றித்திருநாளான விஜயதசமி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARL SMART WATER SOLUTION

*"Smart Water, Smart Life"*

நீர் சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வாக நாங்கள்.

## எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு.

நீங்கள் உங்கள் அயலவர்கள். நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியபடுத்தி அவர்களும் எமது Water Filter பொருத்தினார்கள் என்றால் அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு I வருடத்திற்குரிய Sediment Fillter (6ps ) இலவசம்.

021 430 0044 /076 666 5267

YARL SMART (Pvt) Ltd
No.341 K.K.S Road, Jaffna.
yarlsmartwater@gmail.com
www.yarlsmartwater.com





## Yarl Smart PARTY

இல்லங்கள், மண்டபங்களில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளை மனம் போல் மாற்ற...



- Cutting Sticker
- Bithdsy Cakes
- Party Smoke Machine
- Party Bubbles Machine
- Balloon Decoration
- DJ music
- Surprise Gift
- Lighting Decoration
- Artifcial Flowers Decoration



வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களின் விளம்பரங்களை சிறந்த முறையில் உருவாக்கிட எமை நாடுங்கள்.. அத்துடன் வர்த்தக விளம்பரங்களை தொலைக்காட்சிகள் வானொலிகளில் ஒலி ஒளி பரப்பிட உடன் அழையுங்கள்.

076 624 3205 I 076 919 9989

youtube channel :- smartparty

SMART PARTY
"happy home, happy life"
No. 319, KKS Road, Jaffna
TP:- 021 430 0045 | 076 919 9989


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வே நெருக்கடிகள் தீர்வதற்கு வழி

## சந்திரிகா சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஒக்.5**

**பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டால் மாத்திரம் நாடு மீண்டெழாது. தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வு கண்டால்தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு அனைவரும் ஓரணியில் ஒரேதிசையில் பயணிக்க முடியும்.**

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாவிட்டால் சிங்களவர்கள் ஒரு திசையிலும், தமிழ் - முஸ்லிம் மக்கள் வேறொரு திசையிலும் பயணித்துக்கொண்டே இருப்பார்கள். இதனால்தான் நாளுக்கு நாள் பிரச்சினைகள் குவிகின்றன. கருத்து மோதல்களும் ஏற்படுகின்றன.

இந்த நிலைமை மக்களுக்கும் அழகு அல்ல. நாட்டுக்கும் நன்மை அல்ல. எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் - என்றார். (எ-22)

## ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் வர்த்தமானிக்கு அனுமதி

*2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. அதில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி மேற்படி யோசனையை முன்வைத்துள்ளார், இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2023 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவைத் தயாரிப்பதற்காக கடந்த ஒகஸ்ட் 22 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒவ்வொரு செலவுத் தலைப்புக்களுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள 2023 ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு அமைச்சரவையால் ஆராயப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான மொத்த மீண்டெழும் செலவாக 4 ஆயிரத்து 634 பில்லியன் ரூபாவும், மொத்த மூலதனச் செலவாக 3 ஆயிரத்து 245 பில்லியனும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (எ-44)



# கோப் குழுவிலிருந்து விலகினார் ஹர்ஷ டி

கொழும்பு, ஒக்.5

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழுவில்) இருந்து, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா விலகியுள்ளார்.

டலஸ் அழகப்பெரும ஆதரவு அணி உறுப்பினரான பேராசிரியர் சரித ஹேரத்துக்கு வழிவிட்டே, ஹர்ஷ டி சில்வா தாமாக விலகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார்.

கோப் குழுவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் பெயரை நாம் முன்மொழிந்திருந்தோம். அவர் தற்போது தாமாக விலகியுள்ளார். எனவே, அந்த இடத்துக்கு சரித ஹேரத்தை நியமிக்குமாறு பரிந்துரைக்கின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சரித ஹேரத், கோப்குழுவின் தலைவராக செயற்பட்டவர். எனினும், சபாநாயகரால் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட பெயர் பட்டியலில் அவரின் பெயர் இடம்பெறவில்லை. அவர் டலஸ் பக்கம் சென்றதால் மொட்டுக் கட்சி, அவரின் பெயரை ஒதுக்கியுள்ளது. அதையடுத்தே பிரதான எதிர்க்கட்சி இவ்வாறானதொரு நகர்வை கையாண்டு, மொட்டுக் கட்சிக்குப் பதிலடி கொடுத்துள்ளது. (எ-44)

# வங்குரோத்து நிலைமைக்கு ராஜபக்சவினரே காரணம்!

## முன்னாள் ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.5

நாடு வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு ராஜபக்சக்களே முழுக்காரணம். இதை எவரும் மறுதலிக்க முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்ச யுகம் மீண்டும் ஏற்பட மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சியும், கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியும் வளமிக்க எமது நாட்டைச் சீரழித்துவிட்டது.


ஒட்டு மொத்தத்தில் ராஜபக்ச குடும்பமே எமது நாட்டு வளங்களைச் சுரண்டி உண்டுவிட்டது. ராஜபக்சக்களின் ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்கள், தங்கள் குற்ற உணர்வை உணர்ந்து கொதித்தெழுந்தமையால்தான் ராஜபக்சக்களின் யுகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஏதோவொரு வழியில் மீண்டும் தங்கள் ஆட்டங்களைக் காண்பிக்க ராஜபக்சவினர் முயல்கின்றனர். இதற்கு எவரும் துணைபோகக்கூடாது. அமைச்சரவையில் ராஜபக்சக்கள் எவரும் அங்கம் வகிக்க இடமளிக்கக்கூடாது.

விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும். நிலையான அரசுஅமைய வெளியிலிருந்து எனது பங்களிப்பை வழங்க நான் தயாராகவுள்ளேன்-என்றார். (எ-22)

# ஐ.எம்.எப். உடன்பாட்டை மறைப்பது எதற்காக?

## விமல் வீரவன்ஸ கேள்வி



சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு தொடர்பான ஒப்பந்தம் இன்னும் ஏன் பகிரங்கப்படுத்தப்படாமல் உள்ளது என்று 'உத்தர லங்கா சபாகய'வின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. அதிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார் விமல் வீரவன்ஸ.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என அரசாங்கம் அறிவித்தது. அது தொடர்பான ஒப்பந்தம் ஏன் இன்னும் முன்வைக்கப்படவில்லை? அவற்றில் உள்ள சரத்துகள் எவை? எவ்வாறான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன? என்பன தொடர்பில் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்- என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இதற்கு முன்னரும் இது தொடர்பில் பல தடவைகள் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. இணக்கப்பாடு தொடர்பில் வரைவொன்றே உள்ளது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், உரிய ஆவணங்கள் வழங்கப்படும் -என்றார். (எ-44)


# மரண அறிவித்தல்



## திரு.வேலுப்பிள்ளை தெய்வேந்திரன்

**தோற்றம்** 06.11.1939 **மறைவு** 04.10.2022

மடத்தடி சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை தெய்வேந்திரன் அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - லட்சுமி ஆகியோரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இராசம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் நவமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, தங்கரத்தினம், கந்தையா, மாணிக்கம், கிருஷ்ணர் மற்றும் தம்பிராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும் பிரதீபா (ஆசிரியர் - யாழ்.ஆனைப்பந்தி மெ.மி.வி), பிரபாகரன் (ஆசிரியர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜெயதீபன் (ஆசிரியர் - சிவானந்தா வித்தியாலயம் மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜசேகரம் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - RDD), றொசானி, நிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிதர்சனா, நிதுஷன், தனுஷன், யாதீசன், லதிஸ்ரிக்கா, நிருஷ்ரிகா, திரிஷா, ஜெகியல், கிங்ஸ்ரன், திவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 01.30 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0762983852 (மகன்)
0762789991 (மகன்)
0772905004 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சுதன் கிருஸ்ணா

யாழ்ப்பாணம் கொக்குவில்லை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் ட்ரான்சியை (Drancy) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதன் கிருஸ்ணா கடந்த (26.09.2022) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நாகராசா (சின்னக்கிளி), லீலாவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மருமகளும், சுதனின் அன்பு மிகு மனைவியும், சில்வியா, மர்லின் (மாதுமை), அவினாஷ் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,தயா (சுவிஸ்), கௌரி (மன்னார்), நந்தினி (பிரான்ஸ்), சாளினி, விஜி (லண்டன்), தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், ராசன் (மன்னார்), சுதாகர் (பிரான்ஸ்), சுரேஸ், கண்ணன் (லண்டன்), கில்டா (சுவிஸ்), கார்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனியும், நிஷானி (ஆசிரியர்-மன்/எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயம்), நிவேக்கா, நிருஷன் (பிரான்ஸ்), சுதர்சிகா(பிரான்ஸ்), சுவேதன் (பிரான்ஸ்), அஸ்விகா (பிரான்ஸ்), அஸ்வின் (லண்டன்), அபிஷன் (லண்டன்), ஆகாஸ் (லண்டன்) ஆகியோரின் ஆசைமிகு அன்ராவும், சுவேதா (சுவிஸ்), கெவின் (சுவிஸ்), நவின் (சுவிஸ்), கிளாரினா (பிரான்ஸ்), அவந்திகா (பிரான்ஸ்), சுவான் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அத்தையும், மதீபன் (Sales Assistant - Rocell, Jaffna), ரஞ்சிதன் (DO - Government Valuation Department, Jaffna)ஆகியோரின் பாசமிகு மாமியும், கோஷிதா, ஸ்பிரா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் (61 avenue de la Division Leclerc, 93700, Drancy) நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் Cimetière de Drancy Rue Sacco et Vanzetti, 93700, Drancy இல் நல்லடக்கம் செய்யப்படும். அதே வேளை இலங்கை நேரப்படி, பிற்பகல் 3.00 மணியளவில் 40/33 பூநாரி வீதி, 2ஆம் ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் தாயாரின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.



பிறப்பு 20.01.1972

இறப்பு 26.09.2022

**40/33, பூநாரி வீதி,**
**2ம் ஒழுங்கை,**
**கொக்குவில்.**

**077 411 3996**
**070 464 9583**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 46910) (3/6)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை

உப அலுவலகம் - மல்லாகம்
விண்ணப்பதாரியின் பெயர் - திரு. அண்ணாமலை கணேசமூர்த்தி
முகவரி - நீதிமன்ற வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.

குறித்த ஆதனமானது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 20 வல்லைசங்கானை வீதி ஆதன இலக்கம் - 214.216.218 இல் A அண்ணாமலை என பதியப்பட்டுக் காணப்படுகின்றது.

ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 4253/07.06.2012 இலக்க திகிதிய உறுதியின் மூலம் குமாரசாமிக்குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள் என்பவர் அண்ணாலை கணேசமூர்த்தி என்பவருக்கு விற்றுள்ளார் இவ்வாதனம் 1921 ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் திகதி நொத்தாரிசு அ.பொன்னம்பலம் முகதாவில் 6515 ஆம் இலக்கத்தில் குமாரசாமிக்குருக்கள் நகுலேஸ்வரக்குருக்களின் பிதா கார்த்திகேசு ஐயர் தியாகராசா ஐயரின் பெயரில் நிறைவேறிய நன்கொடை உறுதியின்படி அவர்வழி வந்த முதுசமென குறிப்பிட்டுள்ளார் குமாரசாமிக்குருக்கள் நகுலேஸ்வரக்குருக்களே இதற்கான சட்டபூர்வ வாரிசு எனவும் 6515 இலக்க உறுதி தொலைந்துவிட்டதெனவும் விண்ணப்பதாரியினால் எழுத்துமூல ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையுமான "சாயுடை" என்ற நிலப்பரப்பு 02 குழி 05.10. இது நிலஅளவையாளர் A.கமலசேகரம் அவர்களால் வரைந்த 5622/11.05.2012 இலக்க வரைபடத்தில் துண்டு 02. என காட்டப்பட்டுள்ளது.

இதன் எல்லைகள்.

கிழக்கு - றோட்டு
வடக்கு - மிகுதி ஆதனம்
மேற்கு - ரமேஸ்குமார் பெண் கனிஸ்ரா மேரிக்குரிய ஆதனம்
தெற்கு - வாய்க்காலும் வல்லைசங்கானை வீதியும்

இவ்வாதனத்தை அண்ணாமலை கணேசமூர்த்தி என்ற பெயரில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்தும் வெளிநாட்டில் இருப்பவர்கள் உறவினர்கள் மூலமாக ஆவணங்களை சமர்ப்பித்தும் தெரியப்படுத்தலாம். ஆட்சேபனை ஏதும் வராதவிடத்து ஆதனத்தை உரிமைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(cs 46924 B) (2.6)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை

உப அலுவலகம் - மல்லாகம்
விண்ணப்பதாரியின் பெயர் - திரு அண்ணாமலை கணேசமூர்த்தி
முகவரி - நீதிமன்ற வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.

குறித்த ஆதனமானது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 20 குளமங்கால் வீதி ஆதன இலக்கம் - 05. இல் A அண்ணாமலை என பதியப்பட்டுக் காணப்படுகின்றது.

ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 4252/07.06.2012 இலக்க திகிதிய உறுதியின் மூலம் குமாரசாமிக்குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள் என்பவர் ஐயாத்துரை உதயகுமார் என்பவருக்கு விற்றுள்ளார். இவ்வாதனம் 1921 ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் திகதி நொத்தாரிசு அ.பொன்னம்பலம் முகதாவில் 6515 ஆம் இலக்கத்தில் குமாரசாமிக்குருக்கள் நகுலேஸ்வரக்குருக்களின் பிதா கார்த்திகேசு ஐயர் தியாகராசா ஐயரின் பெயரில் நிறைவேறிய நன்கொடை உறுதியின்படி அவர்வழி வந்த முதுசமென குறிப்பிட்டுள்ளார் குமாரசாமிக்குருக்கள் நகுலேஸ்வரக்கருக்களே இதற்கான சட்டபூர்வ வாரிசு எனவும் 6515 இலக்க உறுதி தொலைந்துவிட்டதெனவும் விண்ணப்பதாரியினால் எழுத்துமூல ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐயாத்துரை உதயகுமாரும் மனைவி விஜயதாரணியும் பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் 4640/ 2508/ 2013 இலக்க திகதிய உறுதி மூலம் அண்ணாமலை கணேசமூர்த்தி மனைவி கணேஸ்வரிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதனவிபரம்**
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையுமான "சாயுடை" என்ற நிலப்பரப்பு 02 குழி 02.35. இது நிலஅளவையாளர் A.கமலசேகரம் அவர்களால் வரைந்த 5622/11.05.2012 இலக்க வரைபடத்தில் துண்டு 01. என காட்டப்பட்டுள்ளது.

இதன் எல்லைகள்.

கிழக்கு - றோட்டு
வடக்கு - சச்சிதானந்தம் பெண் சிவசோதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
மேற்கு - ரமேஸ்குமார் பெண் கனிஸ்ரா மேரிக்குரிய ஆதனம்
தெற்கு - மிகுதி ஆதனம்

இவ்வாதனத்தை அண்ணாமலை கணேசமூர்த்தி மனைவி கணேஸ்வரி என்ற பெயரில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்தும் வெளிநாட்டில் இருப்பவர்கள் உறவினர்கள் மூலமாக ஆவணங்களை சமரப்பித்தும் தெரியப்படுத்தலாம். ஆட்சேபனை ஏதும் வராதவிடத்து ஆதனத்தை உரிமைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(cs 46925 A) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழாக்காணும் இனிய வாழ்வு இல்லம் - 2022

## தேவிபுரம் "அ" பகுதி புதுக்குடியிருப்பு

1997.09.19ம் திகதி ஸ்தாபகர் அமரர் மாசிலாமணி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கட்புலன். செவிப்புலன் . பேச்சுத்திறன் குன்றிய மாற்றுத்திறனுடைய பிள்ளைகளை பராமரிக்கும் இனிய வாழ்வு இல்லமானது தனது 25வது வருடத்தை நிறைவு செய்துள்ளது. இக்காலத்தில் இல்லம் பல சவால்களை எதிர்கொண்டு பற்பல சோதனைகளை சாதனையாக்கிய வரலாறுகள் மீட்கப்பட வேண்டியவை கல்வி விளையாட்டு கலை விழுமியங்களில் தேசியம் வரை சாதனைகள் பதித்து இன்று சகலகலாவல்ல தன்னார்வத் தொண்டு நிறுவனமாக பல மாணவர்களை சுமந்து நிற்கும் இவ் இல்லத்தை பாராட்டி வாழ்த்துவோம் வாரீர்.

### ஆசிச்செய்தி



**சிவஸ்ரீ ஜெகா செந்தில்நாதக்குருக்கள்**
அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவில்
புதுக்குடியிருப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தேவிபுரம் பகுதியில் அமைந்துள்ள இனிய வாழ்வு இல்லம் இறைவன் குடி கொண்டிருக்கும் ஒரு இல்லமாகும்.

உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும் இன்புற்று இருக்க வேண்டும் என்பது இறைத்தருமம் ஆகும். கட்புலன் செவிப்புலன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகளை வளர்க்கின்ற இந்த இல்லத்தின் பணி மகத்தானது இப்பணியில் இணைந்துள்ள அனைவருக்கும் இறை ஆசி வேண்டுகின்றேன்.

வெள்ளி விழாவை முன்னிட்டு மாணவர்கள் சகல திறன்களையும் பெற்று சிறப்புடன் வாழ இறைவனை பிரார்த்தித்து எனது நல்லாசிகளை தெரிவிப்பதில் நிறைவடைகின்றேன்.

### ஆசிச்செய்தி



**அருட்தந்தை அ.அல்வின் கிருபாகரன்**
பங்குத்தந்தை புனித யூதா ததேயு ஆலயம்

இனிய வாழ்வு இல்லம் என்ற பெயருக்கு கேற்ப எம்ஈழ தேசத்தில் மாற்றுத் திறன் பிள்ளைகளுக்கு இனிய வாழ்வு கொடுத்து அவர்களை மாமனிதர்களாக உருவாக்க உரிய பணிகளை செய்து வரும் இனிய வாழ்வு இல்லத்தின் வெள்ளி விழாவுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 25 ஆண்டுகளாக இனிய வாழ்வு இல்லத்தின் உருவாக்கத் திற்கும் வளர்ச்சி-க்கும் உயிர் கொடுத்து உரம் இட்ட உயரிய நல்ல உள்ளங்களை நன்றியுடன் வாழ்த்-துகின்றேன்.

### வாழ்த்துச்செய்தி



**மி.யேசு றெஜினோல்ட்**
தலைவர்
பணிப்பாளர் சபை
இனிய வாழ்வு இல்லம்

விழிப்புலன் செவிப்புலனற்ற விசேட தேவையுடைய பிள்ளைகளின் வாழ்வுக்கு ஒளியூட்டும் அமரர் மாசிலாமணி அவர்களின் சிந்தனையில் உதித்த இவ் இனிய வாழ்வு இல்லமானது பல்வேறு இன்னல்கள் சவால்கள் போராட்டங்களை தாண்டி இன்று 25வது ஆண்டு விழாவை கொண்டாடுவதயிட்டு மிகுந்த மனநிறைவு அடைகிறேன். இவ்இல்லம் இன்று இந்நிலையை அடைவதற்கு தூரநோக்கு சிந் தனையுடன் காலத்துக்கு காலம் சிறந்த தீர்மானங்களை எடுத்து இல்லத்தை பாதுகாத்த அரச உயர் அதிகாரிகரிகள் மற்றும் பணிப்பாளர் சபை முகாமைப் பணியா ளர்கள் ஆசிரி யர்கள் ஏனைய அனைத்து பணியாளர்கள் அனைவரையும் நினைவு கூருவதுடன் இவ்இல்லத்தையும் பிள்ளைகளையும் எல்லாம் வல்ல இறைவன் ஆசிர்வதிக்க வேண்டுகின்றேன்.

### இனிய வாழ்வு இல்ல வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி



**க.விமலநாதன்**
மாவட்ட செயலாளர். மாவட்ட செயலகம்
முல்லைத்தீவு காப்பாளர் சபை
இனிய வாழ்வு இல்லம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் மாற்றுத் திறனாளிகளை பராமரிக்கின்ற சிறந்ததொரு இடமாக இனிய வாழ்வு இல்லம விளங்குகின்றது. இவ் இல்லமானது பல்வேறுபட்ட இன்னல்களையும் சவால்களையும் கடந்து வெள்ளி விழா கொண்டாடப்படுவதை எண்ணி வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன்.

மேலும் பல்வேறு திறமைகளை தன்னகத்தே கொண்டுள்ள மாற்றுத் திறனாளிகளான பிள்ளைகளை பராமரிப்பதும் அவர்களுக்கு கௌரவத்தினை வழங்குவதும் ஒவ்வொருவரினதும் கடமையும் பணியுமாகும் என்பதனை தெரிவித்து இனிய வாழ்வு இல்லத்தின் பணி சிறக்கவேண்டும் எனவும் வளரவேண்டும் எனவும் கூறி எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**நா.வேதநாயகன்**
முந்நாள் அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம். முல்லைத்தீவு. கிளிநொச்சி. மன்னார்
காப்பாளர சபை உறுப்பினர் இனிய வாழ்வு இல்லம்

இனிய வாழ்வு இல்லமானது தனது இருபத்தி ஐந்து வருடங்களில் மிகச் சிறப்பான சேவைகளை ஆற்றி வெள்ளி விழா காணுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இடைக்காலத்தினில் இல்லமானது பல இடையூறுகளை சந்தித்து அதன் வளர்ச்சி பாதிக்கப்பட்ட நிலையில் மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்ற வகையில் பொருத்தமனாதும் தேவையான துமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ந்தும் இல்லமானது புதிய நிர்வாகத்தின் கீழ் சிறப்பாக இயங்குவதறகு வழி வகைகள் மேற் கொள்ளப்பட்டமை இன்றும் எள்மனதில் பசுமையான நினைவா-கவுள்ளது. இல்ல மானது தனது இலட்சியப்பாதையில் இமியளவும் விலகாது மாற்றுத் திறனுடைய மாணவர்களின் வாழவில் நம்பிகை ஒளி ஊட்டிக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

தொடர்ந்தும் இவ்வில்லம் சிறப்பான சேவையினை வழங்கி தனது சொந்தக்காலில் நிற்கக்கூடிய நிலையை அடைய வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோன்.

### வெள்ளிவிழா வாழ்த்துக்கள்



**சி.ஜெயகாந்த்**
பிரதேச செயலாளர். பிரதேச செயலகம்
புதுக்குடியிருப்பு. காப்பாளர் சபை
இனிய வாழ்வு இல்லம்

முல்லை மண்ணிலே இறைவனின் குழந்தைகளாக கண்பார்வையிழந்தும் வாய் பேசமுடியாமலும் செவிப்புலனற்றும் உள்ள மழலைகளுக்கு வரப்பிரசாதமாக செயற்பட்டு வரும் "இனிய வாழ்வு இல்லம்" தன் சிறப்பான செயற்பாடுகளினுடாக வெள்ளி விழா காணுவதில் பெருமகிழ்வடைகிறேன். 1997ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக இத்தகைய சிறார்களுக்கு நல்ஒழுக்க விழுமியங்களை போதித்து அவர்களை சமூகமயப்படுத்தி வருவதில் இனிய வாழ்வு இல்லத்திற்கு நிகர் ஈடுஇணை எதுமில்லை என்றே கூறவேண்டும்.

இத்தகைய இனிய வாழ்வு இல்லம் இன்னும் பலசிறார்களை தன்னகத்தே உள் வாங்கி அவர்களின் வாழ்விற்கு ஒளியேற்றி நீண்டகாலம் சிறப்புடன் செயலாற்ற வேண்டும் என இவ்வெள்ளி விழா நாளிலே உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**ச.நாகரத்தினம்**
முன்னாள் தலைவர்
விசேட ஆலோசகர்

செவிப்புலன் விழிப்புலன் குன்றிய மாணவர்களைப் பராமரித்து வரும் இனிய வாழ்வு இல்லம் தனது வெள்ளி விழாவை 06.10.2022இல் கொண்டாடுகின்றது. 2012ம் ஆண்டிலிருந்து இவ்வில்லத்தில் பலதரப்பட்ட வகிபாகங்களில் பணியாற்றியவன் என்ற வகையில் இனிய வாழ்வு இல்லத்தின் பணிகள் அதன் செயற்பாடுகள் பற்றி நான் நன்கு அறிவேன் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் வசந்த ஒளி வீசிக்கொண்டிருக்கும் இவ்வில்லம் இன்று வெள்ளி விழாகொண்டா டுவதையிட்டு எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்

### வாழ்த்துச் செய்தி



**பொ.பேரின்பநாயகம்**
கௌரவ செயலாளர்
நிறைவேற்றுச் செயலணி
இனிய வாழ்வு இல்லம்

25வருடத்தை கடந்து வந்த இனிய வாழ்வு இல்லம் பல சாதனைகள் கண்ட அதே வேளை பல இடர்பாடுகளையும் கண்டுள்ளது. இவையாவும் பாடமாக அமையும் படிக்கற்களாக அமையும் அடுத்த காலங்களில் மேலும் உயர் சாதனைகள் பெற வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**அகல்யா செகராஜா**
மாகாண பணிப்பாளர்
சமூகசேவை திணைக்களம் வடமாகாணம்

இனிய வாழ்வு இல்ல வெள்ளி விழா மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எனது பரப்புக்குட்பட்ட வடமாகாணத்தில் குறிப்பாக கட்புலன் கேட்டல் திறன் பேச்சுத்திறன் அற்ற பிள்ளைகளுக்கு காப்பகமாக இருக்கும் இனிய வாழ்வு இல்லமும் ஒரு முன்னணி நிறுவனமாக இருந்து வழிகாட்டி வருவது குறிப்பிட தக்கதாகும். இல்லம் தொடங்கி பற்பல இடர்களுக்கு முகம் கொடுத்து முகாமிற்குள் நிற்கதியாகி மீண்டும் பெருவிருட்சமாக நிமிர்ந்து நிற்பதற்கு உழைத்த உழைக்கின்ற அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். இங்கு வாழும் மாற்றுத்-திறன் மிக்க தெய்வக்குழந்தைகள் ஆற்றுவார்கள் பல சாதனைகள் தாமும் வாழ்ந்து தக்கா ரையும் வாழ வைப்பார்கள் என்று நம்பி விடைபெறுகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**க.மகாதேவராசா**
முகாமையாளர்
இனிய வாழ்வு இல்லம்

மாற்றுத்திறனாளி மாமனிதன் அமரர் மாசிலாமணியின் உயர் சிந் தனையின் வடிவமாக உருவாக்கம் பெற்ற இனிய வாழ்வு இல்லமானது தன் இலட்சியப்பாதையில் இம்மியளவும் விலகாது சிறப்பாக பணியாற்றி இன்று வெற்றிப் பெருமிதத்துடன் வெள்ளி விழா கொண்டாடுவது மகிழ்ச்சி க்கும் பராட்டுக்குரியதுமாகும்.. இது தன் சேவையில் மேன்மேலும் வளர்ந்து பொன்விழா வைர விழா அமுத விழா போன்ற விழாக்களை காண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**இ.செல்வநாயகம்**
உதவி முகாமையாளர்
இனிய வாழ்வு இல்லம்

25 வருட காலத்தில் உருப்படியான ஒரு பரம்பரையை உருவாக்கிய இனிய வாழ்வு இல்லத்திற்கு தலைசாய்க்கின்றேன்.பார்வை. கேட்டல். பேச்சுத்திறன் குன்றிய அனைவரையும் இணைத்து வளர்க்க ஆசைகொள்ளும் இனிய வாழ்வு இல்லத்திற்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**ச.திருச்செல்வம்**
முன்னாள் முகாமையாளர்
பணிப்பாளர் சபை உறுப்பினர்
இனிய வாழ்வு இல்லம்

வெள்ளி விழா காணும் இனிய வாழ்வு இல்லம் அடைய வேண்டிய அனைத்து இலக்குக்களையும் அடைந்துள்ளது. செவிப்புலன் விழிப்புலன் பேச்சுத்திறன் குன்றிய மாணவர்கட்கு காப்பகமாகக் திகழும் இனிய வாழ்வு இல்லம் தொடர்ந்து பொன் விழா வைரவிழா அமுதவிழா அனைத்தையும் சிறப்புற கொண்டாட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டி வாழ்த்துகின்றேன்.

### இனியவளின் வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.



**ந.தசரதராசகுமாரன்**
மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்
முல்லைத்தீவு

இவ் இல்லம் பல இடரகளை கடந்து 25 ஆண்டுகளாக விழிப்புலன் அற்ற பேச்சுத திறன் அற்ற பிள்ளைகளுக்கு நிலைபேறான வழிகாட்டுதல்களை ஆற்றி நற் பிரஜைகளாக மட்டுமின்றி தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்யும் பங்காளிகளாகவும் மாற்றி மீண்டும் சமூகத்திற்கு கையளிக்கும் கைங்கர்யத்தை ஆற்றி வருகிறது. இன்று வரை 18 பிள்ளைகள் பல்கலைகழகத்திற்கு சென்றுள்ளாரகள் அதைவிட புலகப்படக்கலை. தச்சுக்கலை. தையற்கலை.தோற்பொருள் பயிற்சிகள். ஐசிங் மேக்கப் போன்ற தொழில்களில் எமது பிள்ளைகள் பிரகாசித்து கொண்டிருப்பது மகிழ்ச்சி தருவன. இவ் வாறான சிறப்புக்களைக் கொண்ட இவ்வில்லம் மேலும் பல்லாண்டு காலம் நீடித்து நிலைத்து மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கு சமூகத்தில் உயரிய அந்தஸ்தைப் பெற்றுத்தர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திருமதி அ.கயிலாசப்பிள்ளை**
தலைவர்
மனிதநேய நம்பிக்கை நிதியம்
காப்பாளர் சபை உறுப்பினர் இனிய வாழ்வு இல்லம்

இனிய வாழ்வு இல்லம் இம்மாதம் வெள்ளி விழாக் கொண்டாடுகின்றது. இவ்விழாவையிட்டு "இனியவளின் வெள்ளி விழா" என்ற பெயரில் மலர் வெளியிடுவதையிட்டு [illegible]

காலத்தின் தேவைகருதி 19.09.1997ம் திகதி வன்னியில் இவ்வில்லம் தோற்றுவிக்கப்பட்டது. கட்புலன். செவிப்பலன். பேச்சுத்திறன் குன்றிய மாற்றுத்திறனாளிகளை உள்வாங்கி அவர்களை திறம்பட பராமரித்து வருகின்றது. இவ்இல்லம் தொடர்ந்தும் தமது பணிகளை திறம்பட செய்ய வேண்டும் என்றும் அதற்கான உதவிகளை நாமும் செய்வோம் என்றும் கூறி எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றேன்

### வாழ்த்துச் செய்தி



**சி.ஜெனாட்நியமன்**
கௌரவ பொருளாளர்
இனிய வாழ்வு இல்லம்

முல்லை மண்ணின் புதுக்குடியிருப்பு தேவிபுரம் எனும் சிற்றூரில் வடிவழகாய் மிளிர்ந்து இங்கு வாழ்வொளி தந்திடும் இனியவளே நீ செவிப்புலன் கட்புலன் பேச்சுத் திற்ன குன்றிய மாற்றுத்திறனாளிகளின் திறன் அறிந்து உளமறிந்து உயர்வைடைய உன்னத பணியாற்றும் நின் செயல் கண்டு உவகை கொள்கினறேன். உன் சேவைகள் ஒவ்வொன்றும் என்றென்றும் பாராட்டுக்குரியது இனிய வாழ்வு இல்லமானது 25வது வெள்ளி விழா காணுவதையிட்டு பெருமிதம் கொள்வதுடன் வாழ்த்துரை வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன்**
சட்டத்தரணி
முல்லைத்தீவு இல்ல சட்ட ஆலோசகர்
இனிய வாழ்வு இல்லம்

வந்தோரை வாழவைக்கும் வன்னி மண்ணின் தனிப்பெரும் முதுசம் இனிய வாழ்வு இல்லம். விசேட தேவையுள்ள எம் உறவுகளை பேணிப்பாதுகாத்து விண்ணளவு சாதிக்க வைத்தது எமது இனிய வாழ்வு இல்லம் அறப்பணியில் இன்று அகவை இருபத்தைந்து காணும் எமது இனிய வாழ்வு இல்லத்தை வாழ்த்தி வணங்குகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**Dr. ஆ.பகீரதன்**
பொறுப்பு வைத்திய அதிகாரி பிரதேச வைத்தியசாலை
மூங்கிலாறு
இல்ல வைத்திய-ஆலோசகர்.இனிய வாழ்வு இல்லம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசேடமான தேவையுள்ள பிள்ளைகளின் நலனை சிரமேற்கொண்டு இயங்கி வரும் இனிய வாழ்வு இல்லத்தின் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

போர்க்கால சூழலில் சரி தற்போதைய சூழலிலும் சரி தமது நோக்கத்தினை சிரமேற் கொண்டு இயங்கி வரும் இந்நிறுவனமானது மாணவர்களின் எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு சிறப்பாக பணியாற்றுவது பாராட்டத்தக்கது. இந்நிறுவனம் மென்மேலும் வளரவேண்டும் அதற்காக உழைக்கின்ற அனைத்து நல்லுள் ளங்களுக்கும் இறையாசீர் என்றும் கிடைக்க வேண்டுமென எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி

**ச.மோகனபவன்**
தலைவர்
மகாதேவ சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர் கிளிநொச்சி

மாற்றுத்திறன் கொண்ட எம் குழந்தைகளை அன்போடு அரவணைத்து அவர்களை பல்துறை சாதனையாளர்களாக வளர்த்து வருவதில் 25 வருடங்களை கடந்து. பெருமையுடன் எம் இனத்தின் வளர்ச்சிக்கு தனித்துவமான அடையாளத்தினை தன் பெயரிலே தாங்கி வரும் இனிய வாழ்வு இல்லமானது இலங்கை திருநாட்டில் மட்டுமி-ன்றி உலக நாடுகளிலும் பரந்து வாழ்ந்து வரும் எம் உறவுகளினதும் வேற்று மொழி நாட்டவரிடத்திலும் தனக்கான தனித்துவத்தினை பெற்றுள்ளமையினை யாம் பெருமையுடன் கூற வேண்டிய நேரமிது.

இங்குள்ள குழந்தைகளில் 18பேர் இதுவரையில் பல்கலைக்கழக கற்கையினை நிறைவு செய்ய முடித்துள்ளதுடன் தொடர்ந்தும் கல்வியிலும் துறைசார் திறமைகளிலும் மிளிர்ந்து வருகின்றார்கள். தற்போதைய சூழ்நிலையிலும் 56 வரையிலான ஆண் பெண் குழந்தைகளை பராமரித்து அவர்களை எம் இனத்தின் உயர் ந் தவர்களாக மாற்றும் சவால்மிக்க சேவையினை வாழ்த்துவதுடன் இனியவளின் இச்சேவை பரந்து விரிந்து புதிய பரிணாமத்துடன் தொடரும் எனும் அசையா நம்பிக்கையுடன் வாழ்த்தி பிரார்த்திக்கின்றோம்.

### வாழ்த்துச் செய்தி

**திரு.சி.கதிர்வேலு**
தலைவர்
ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்
வதிரி கரவெட்டி

இயற்கையோடு இணைந்த இனிய வாழ்வு இல்லம் கட்புலன் செவிப்புலனால் பாதிக்கப்பட்ட சிறுவரகளை ஆதரித்து உணவு உடை உறையுள் வழங்குவதோடு சிறார்க-ளின் உள்ளார்ந்த ஆற்றல்களை மேம்படுத்துவதில் ஒரு முன்னணி இல்லமாக திகழ்கின்றது.

"கண்ணுடையார் என்பார் கற்றார்
முகத்திரண்டு புண்ணுடையர் என்பார் கல்லாதார்"

குறளின் பொருளுணர்ந்து மாற்றுவலுவுள்ள மாணவர்களை கல்வியில் மேம்படுத்த விசேட ஆசிரியர்களை நியமித்து அன்போடு கல்வியும் ஒழுக்கமும் போதித்து பதினெட்டு மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு தேர்வானது சான்றாகும்.

எமது எதிர்கால சிற்பிகளை அழகாக செதுக்கி நற்பிரஜைகளாக சமூகத்தில் இணைக்க அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றிவரும் தர்மகர்த்தா சபையினர் பணிப்பாளரின் சேவை வரவேற்கத்தக்கதாகும். இல்ல வளர்ச்சிக்கும் மாணவர்கள் முன்னேற்றத் திற்கும் உறுதுணையாக இருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் நல்வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திருமதி வ.மகாலிங்கசிவம்**
பொதுச்சபை உறுப்பினர்

ஆரம்பம் முதல் இன்று வரை இல்ல வளர்ச்சி என்பது என்நெஞ்சில் ஆழப்பதிந்த விடயமாகும். மாற்றுவலுவுடைய பிள்ளைகள் இன்று போல் என்றும் வாழ வேண்டும் இல்லம் அவர்களுக்கு என்றும் ஏணிப்படியாக இருக்க வாழ்த்துகின்றேன்.

06.10.2022ம் திகதி நடைபெறவுள்ள மேற்படி வெள்ளி விழாவினில் பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர் சபை, பணியாளர்கள், மாணவர்கள்**
**இனிய வாழ்வு இல்லம்**

(CR 58195) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 - 09 - 1950



இறப்பு 26 - 09 - 2020

## அமரர் கணேஸ்வரி செல்வராசா

(ஓய்வூதியர் விற்பனைத் திணைக்களம்)

(திதி. புரட்டாதி பூர்வபக்க தசமி 05.10.2022)

ஆயிரம் உறவுகள்
அவனியில் இருந்தாலும்
அம்மாவின் உறவு போல்
ஆருளர் இவ்வுலகில்
அழியாத நினைவுகளுடன்
ஆண்டுகள் இரண்டில்....

ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்

234, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம். (CS 21081) (3/6)

குடும்பத்தினர்
021 224 1865

# நினைவலைகள்

14ஆம் ஆண்டு

தோற்றம் 09.06.1947



மறைவு 11.10.2008

அமரர் நடராஜா அற்புதானந்தராஜா

13ஆம் ஆண்டு ஆறாம் மாதம்

தோற்றம் 16.05.1954



மறைவு 10.04.2009

அமரர் சதானந்தராஜ் சோதிராணி

திதி: ஏகாதசி (05.10.2022)

எம் குடும்ப பாச விளக்குகளாய்ஒரு கூட்டுக் கிளிகளாய் எம்மோடு வாழ்ந்து எம்மையெல்லாம் வாழ வழிவகுத்து விண்ணுலகு புகுந்த உங்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கற்பகபிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(46927) (2.6)

# மரண அறிவித்தல்



## முருகையா வசந்தமலர்

தோற்றம் 17.09.1947 மறைவு 04.10.2022

புதுத்தோட்டம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், விபுலானந்தர் வீதி, மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா வசந்தமலர் அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் தம்பு பொன்னு தம்பதியரின் அன்பு மருமகளும் முருகையாவின் அன்பு மனைவியும் முரளிதரன், விஜித்தா, பாலதரன், வினோதா ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்சினி, ஜெயசூரியன், துஷ்யந்தி, தபேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயமலர், அமரர் வசந்தராணி, ஜெயதேவி, அமரர் விமலாதேவி, தவராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.10.2022 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1940



மறைவு 04 . 10 . 2022

## திரு. கந்தையா கதிர்காமத்தம்பி

மல்லாகம் சோடாக் கம்புனி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா - கதிர்காமத்தம்பி அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (வியாபாரம் - திருநெல்வேலி பொதுச்சந்தை), பிரதீபா (கணக்காளர் - மாகாண திறைசேரி வடக்கு மாகாணம்), காந்தலோசினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதிப்பதிவாளர் நாயகம் அலுவலகம் வடக்கு வலயம்), நிவேதா (அரச கணக்காய்வு உத்தியோகத்தர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரதீஷன் ஆசிரியர் - மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), பிரசன்னா (சுற்றுலா வழிகாட்டி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மாவின் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் நாகேந்திரம், தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும், பவிசாந், பவிஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறுக்கு வீதி,
மாசிவன் சந்தி,
நீர்வேலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 07 . 1953



மறைவு 17 . 09 . 2021

அமரர்

## திருமதி சிவமணி சின்னத்துரை

திதி- புரட்டாதி வளர்பிறை ஏகாதசி

நீங்காத நினைவுகள் தந்து
நீண்ட தூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மத்தி,
குமரநகர்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-02, றெக்கிளமேசன் முதலாம் குறுக்குத் தெரு. ஆதன இல 58 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பிரான்சிஸ் மரியதாஸ் என யாழ் மாநகரசபை ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் குருநகர் றெக்கிளமேசன் இல. 58, முதலாம். குறுக்குத் தெருவிலிருக்கும் பிரான்சிஸ் மரியதாஸ் கைம்பெண் கார்மேல் அம்மா அவர்கள் தனது சீவிய உரித்துக்கு அமைவாக தமது இருபது வருடங்களுக்கு மேல் தடையற்ற ஆட்சியாகவுடையதெனவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 30.03.1993 ஆம் திகதியிட்டு 8797 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் தாயுறுதி குறிப்பிடப்படாது மகளான மருசலின் ஆல்டின் பெண் மேரி நொயிலினுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை: வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, குருநகர் இறையில் முதலாம் குறுக்குத் தெருவில் யாழ்ப்பாணமாநகர சபை வரிமதிப்பு எண் 58 கொண்டவீடும் வளவும் நிலப்பரப்பு அரையும் (1/2) அதற்குரியவைகளும். இதனெல்லை.

கிழக்கு :- முதலாம் குறுக்குத் தெரு.
வடக்கும் மேற்கும் :- பெஞ்சமின் சூசிக்கும் பெண் மேரிறேஸ் வக்கும்,
தெற்கு :- பெனடிக்கும் பெண் பொன்னம்மா வக்குரிய ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை மருசலின் ஆல்டின் பெண் மேரி நொயிலின் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது மருசலின் ஆல்டின் பெண் மேரிநொயிலின் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

**முதல்வர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR.38196) (2.6)

## மீள்விலைமனுவிற்கான அழைப்பு (IFB)
## சாவகச்சேரி பிரதேசசபை (Chavakachcheri P.S)
## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம் (PT -1 – Second Half),
## சபை நிதி வேலைத்திட்டம்
## PROCUREMENT OF SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF 20KW GRID CONNECTED SOLAR PV SYSTEM AT CHAVAKACHCHERI PRADESHIYA SABHA AT KODIKAMAM
## LDSP/NP/JAF/CHAVA.PS/PT- 1 (II)/2022/02 ( R )

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. இவ் விலைமனுக் கோரலானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு
04. வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை Schedule –V,VI இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/ செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2022.10.05 தொடக்கம் 2022.10.19 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 2022.10.05 ஆம் திகதியிலிருந்து 2022.10.19 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2022.10.19 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2022.10.12 திகதி மாலை 15.00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (With out Vat) (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | LDSP/NP/JAF/CHAVA. PS/PT1(II)/2022/02(R) | Supply, Installation, Commissioning and Maintenance of 20 Kw Grid Connected Solar PV System | 6.00 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 63 நாட்கள் | 60,000.00 | 2023.01.18 |

**தலைவர். உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**

**05.10.2022** (CR 38201) (3/6)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.07.1968 உதிர்வு 18.10.2018

அமரர்

## பொன்னம்பலம் கஜேந்திரன்

(முன்னாள் ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர் – முல்லைத்தீவு)

(திதி: தசமி 05.10.2022)

நான்காண்டுகள் ஓடி மறைந்தாலும்
நினைவில் என்றும்
நிலைத்திருக்கும் நின்
நினைவுகளோடு வாழ்கின்றோம் ஐயா!

ஓம் சாந்தி..! ஓம்சாந்தி..! ஓம் சாந்தி..!

ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கும்


அன்பு மனைவி

பூதன் வயல் சந்தி,
கணுக்கேணிக்கிழக்கு, முல்லைத்தீவு.

(CS 46911) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 03 1936 மறைவு 20 01 2021





தோற்றம் 22 09 1939 மறைவு 16 10 2021

## நாகமுத்து அருளம்பலம்

(சமாதான நீதவான் JP
யாழ்ப்பாணம்)

## அருளம்பலம் செல்வபாக்கியம்

திதி - விஜயதசமி (05.10.2022)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவர்களாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததோ
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,
இல.24, சிவபுரம் வவுனிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் கார்த்திகேசு சண்முகராஜா**

தோற்றம் 05.05.1941
மறைவு 17.09.2021

ஆண்டு ஒன்று கடந்தாலும் - உங்கள் அருகாமையை
நிரப்ப இயலவில்லை எவராலும்
நிலையான உங்கள் அன்புக்கு எதுவுமில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
ச.யோகேஸ்வரி (மனைவி), மாறன் (மகன்)
077 563 3632

## வேலையாட்கள் தேவை

**மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய விவசாய மருந்து பசளைக் கடை**


**வேலையாட்கள் தேவை**

- விவசாயம் பற்றிய பூரண அறிவும் கிருமிநாசினி பசளை இரசாயனங்கள் தொடர்பான அனுபவம் கட்டாயமானது.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- (Agriculture diploma NVQ 4 / NVQ 5 / NVQ 6) உள்ளவர் அவசியம்

தொடர்புகளுக்கு
**076 287 8655**

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 11 . 1938



இறப்பு 04 . 10 . 2022

**திரு.நடராஜா நவரட்ணம்**

திருநெல்வேலி முடமாவடியை பிறப்பிடமாகவும், ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா நவரட்ணம் அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா அன்னலக்சுமியின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான Dr.சண்முகம், மகேஸ்வரியின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருள்ஜோதி, தக்ஷினி, தவஜோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதிகா, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனஞ்செயன், சஞ்சீவன், சிந்துஜா, ஆர்ணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் பாக்கியலக்சுமி, ராஜேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, மனோகரன், திருமகள், விஜயபாலன், ஸ்ரீஸ்காந்தா ஆகியோரின் மைத்துனரும் மற்றும் பாஸ்கரன், சிறிகுமார், ரஞ்சன், ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும் தாரணி, Dr.கஜானனன், ஸ்வஸ்திகா, Dr.பிருகஸ்வினி ஆகியோரின் மாமனாரும் பமித்திராவின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"மகேஸ்வரி வாசா"
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்
ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்.
0768919766

## தாயகம் அறக்கொடையின் அறிவித்தல்

தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் இதுவரை காலமும் செய்யப்பட்டுவந்த எமது சேவையின் தொடர்ச்சியை வட மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிற்கும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு, இக்கால சூழ்நிலை காரணமாக கல்வி பயில்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் மாணவர்களிற்கு எமது தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் என்பவற்றினை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.
எனவே உதவி தேவைப்படும் பாடசாலை அதிபர்கள் தொடர்புகொள்ளலாம். தொடர்புகொள்ளும் முன்னுரிமையின் அடிப்படையில் எமது உதவிகள் வழங்கப்படும்.

**021 222 4909, 077 773 0567**

## 8வது ஆண்டு ஈரவிழி அஞ்சலிகள்

**ஜனார்த்தனன் அச்சுதன்**
திதி: விஜயதசமி
(05.10.2022)



ஒன்று கூடி வாழ்ந்த நீ
உந்தன் கூடு விட்டுப்
போன நாள் முதல் எம் கண்ணில்
வழிந்த நீரோ 8 ஆண்டுகள்
ஆயினும் ஆறவில்லை.

**கோகிலமகா புடைவையகம்**
22, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
அப்பா (ஜனார்த்தனன்), அம்மா(சிவமலர்),
2012 விஞ்ஞானப்பிரிவு யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள்
மற்றும் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் **கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா** அவர்களின் பாசமிகு மாமியார்

**சின்னம்மா பொன்னையா**

அவர்கள் 03.10.2022 திங்கட்கிழமை இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(cs.46923) (2.6)

**புவியியற்றுறை சமூகம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி கிருஷ்ணகுமார் ரசிந்தா**
அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னம்பலம் வைரமுத்து**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs21037) (2.6)

**தாதியர் நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 06 . 1933



இறப்பு 04 . 10 . 2022

**செல்வி அருணோதயம் சின்னத்தம்பி**
(ஓய்வு பெற்ற அதிபர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)

உரும்பிராய் மேற்கு, சிவகுல வீதியைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருணோதயம் சின்னத்தம்பி அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், மற்றும் பராசக்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை), சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உமாகஜனின் (யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) பெரிய தாயாரும், அகிலாவின் (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்) மாமியாரும், விசாலினியின் (யா/இந்து மகளிர் கல்லூரி) அன்பு பேர்த்தியாரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கார்த்திகேசுவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு
0778447914 (உமாகஜன்.)

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 38205) 1/6


# கஞ்சா செய்கைக்கு பந்துலவும் ஆதரவு!

கொழும்பு, ஒக்.5

ஏற்றுமதி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக கஞ்சா செய்கைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

கஞ்சா வளர்ப்புக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் ஏதேனும் கலந்துரையாடப்பட்டதா எனவும், கஞ்சா வளர்ப்பு குறித்து தங்களின் தனிப்பட்ட கருத்து என்னவெனவும் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார மேம்பாட்டுக்காக ஏற்றுமதி மற்றும் மருத்துவ தேவைக்காகவும், விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் கஞ்சா வளர்க்க அனுமதி வழங்க வேண்டும் என அன்று முதல் சுட்டிக்காட்டி வருகின்றேன். இதனால் கடும் விமர்சனத்துக்கும் உள்ளானேன்.

அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், போதைக்காக அல்லாமல், ஏற்றுமதிக்காக அனுமதி வழங்குவது ஏற்புடைய நடவடிக்கை. இது தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெறவேண்டும்.

ஏற்றுமதிக்காக கஞ்சா வளர்ப்பது குறித்து துறைசார் அமைச்சர், சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளார் - என்றார். (எ-44)

# போராட்டத்தால் அபிவிருத்திக்கு பின்னடைவாம்

மிக வேகமாக அபிவிருத்தியடைந்து கொண்டிருந்த நாட்டின் பொருளாதாரமும் சமூகமும் போராட்டக்காரர்கள் எனப்படுபவர்களால் நாசமாக்கப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டைக் கட்டியெழுப்பும் வெற்றிகரமான வேலைத்திட்டத்தை அழித்த போராட்டக்காரர்களே இந்தப் பொருளாதார அழிவுக்கு முழுப்பொறுப் பேற்கவேண்டும்.

கடந்த அரசாங்கத்தின்போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான அனைத்துத் திட்டங்களும் கொரோனாத் தொற்று மற்றும் ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக கைவிடப்பட்டன - என்றார். (எ-இ)


## வீடு வாடகைக்கு

கனகரட்ணம் முதலாம் ஒழுங்கையில்
அமைந்துள்ள வீடு தளபாட வசதிகளுடன்
குடியிருப்பிற்கு / நிறுவனத்திற்கு
வாடகைக்கு விடப்படும்.

**075 979 9161, 077 769 9212**

## பௌதீகவியல் /கணிதம்

தமிழிலும் ஆங்கிலத்திலும் A/L, O/L வகுப்புக்கள் 35 வருட அனுபவம் கொண்ட ஆசிரியர் **K. குகநாதன்**
B.Sc (Hons), M.Sc., Cert. in. Edu

விபரங்களுக்கு **074 300 7992**
kugan1351@gmail.com (CS 21069) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானம்பு உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 5
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீர கத்தி விநாயகர் ஆலயம் மற்றும் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயம் என்பவற்றின் மானம்பு உற்சவம் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (அ-ம-17)

## முன்பள்ளி கட்டட திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஒக். 5
வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைக்கு உட்பட்ட இருபாலைப் பகுதியில் இன்றுகாலை அரசமுன்பள்ளிக்கான கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. முன்பள்ளி வளாகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் செயலாளர் இராமலிங்கம் பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

### ஜெனிவா...

'இலங்கை அரசின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் ஜெனிவா சென்றிருந்த நாம், நாட்டில் மீண்டுமொரு இருண்ட யுகம் ஏற்பட இடமளிக்க மாட்டோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும்நாடுகளின்பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளோம். எமது நிலைப்பாட்டை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்' என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

'ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த பிரேரணை நாளை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் வாக்களிக்கத் தகுதியுள்ள 47 நாடுகளில் ஆக ஆறு நாடுகள் மாத்திரமே தமக்கு ஆதரவாக பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் என்று இலங்கை அரசு அச்சம் கொண்டுள்ளது' எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் அமைச்சர் விஜயதாஸவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'ஜெனிவாக் கூட்டத் தொடரின் 51ஆவது அமர்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உரையாற்றும் போது இலங்கையின் தற்போதைய நிலைமையையும், அரசின் நிலைப்பாட்டையும் விலாவாரியாக எடுத்துரைத்துள்ளார். எனவே, இதைப் புரிந்துகொள்ளும் மனநிலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் அதில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் இருக்கும் என்றே நாம் நம்புகின்றோம்.

இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஜெனிவாவில் எத்தனை தீர்மானங்களும் நிறைவேற்றப்படலாம். அதை அரசால் தடுக்க முடியாது. ஆனால், உள்ளகப் பொறிமுறையூடாகவே அரசு எந்தக்காரியத்தையும் முன்னெடுக்கும். சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கையில் ஒருபோதும் இடமேயில்லை' - என்றார். (அ-ம-22)

### ஜெனிவாவில்...

மன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ராஜபக்சக்களின் தான்தோன்றித்தனமான சில முடிவுகளால் நாடு இன்று படுகுழியில் விழுந்துள்ளது. ராஜபக்சக்களின் சகாவான ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டை மீட்டெடுக்கமுடியாது. மக்கள் ஆணை மூலம் புதிய அரசை நிறுவினால் தான் நாட்டுக்கு விடிவு கிடைக்கும். எனினும், இலங்கை மீதான ஜெனிவாத் தீர்மானங்களை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம்' - என்றார். (அ-ம-22)

### பைத்தியக்காரர்களிடம்...

தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எனது தந்தை, தாய் வளர்த்தெடுத்த சுதந்திரக் கட்சியை நான் இறுதி வரையில் பாதுகாத்தே வந்தேன். ஆனால், இன்று சுதந்திரக் கட்சியின் நிலைமையைப் பார்க்கும்போது மிகவும் கவலையளிக்கின்றது. மனநோயாளர் விடுதிகளில் இருக்க வேண்டியவர்கள் இன்று கட்சியின் தலைமைப் பதவிகளில் இருக்கின்றனர். இந்தக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை. கட்சியின் கொள்கைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதனால் திறமைமிக்க பலர் கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர். அனைத்துக்கும் விரைவில் முடிவு கட்டியே தீருவேன்' - என்றார். (அ-ம-22)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

### சர்வதேச...

முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தலைமையிலான 'சுதந்திர மக்கள் சபையின் முக்கியஸ்தருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'நான் இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் எமது நாட்டுக்கு ஆதரவாகவே இருப்பேன். இலங்கை மீதான சர்வதேசப் பொறிமுறையை ஒருபோதும் ஆதரிக்கமாட்டேன். உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு உள்ளகப் பொறிமுறையூடாகவே தீர்வுகாண வேண்டும். நான் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலங்களில் ஜெனிவா விவகாரங்களை நாட்டுக்கு ஆபத்து ஏற்படாதவாறும், நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படாதவாறும் சாதுரியமாகக் கையாண்டேன். ஆனால், தற்போது நிலைமை எல்லை மீறிப் போகின்றது போல் தெரிகின்றது. இந்த ஆட்சி நீடித்தால் ஜெனிவாவில் இலங்கைக்கு 6 நாடுகள் மட்டுமல்ல எந்தவொரு நாடும் ஆதரவு வழங்க முன்வராது. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பின்றி இலங்கை அநாதையாகும் நிலையே ஏற்படும். எனவே, ஜனநாயக வழியில் இந்த ஆட்சியை நாம் கவிழ்த்தே தீர வேண்டும். நாட்டின் மீது பற்றுள்ள அனைவரும் இந்த நடவடிக்கைக்காக ஓரணியில் திரள வேண்டும்' - என்றார். (அ-ம-22)

### திருவடிநிலை...

குறித்த சடலம் மீனவர்களின் வலையில் சிக்கிய நிலையில் இருந்துள்ளது. அதை அவதானித்த மீனவர்கள் இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதன் பின்னர் சடலம் மீட்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. (அ-ம-27-125)

### அரசாங்கத்துக்கு...

போராட்டத்தை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்புகை, தடியடி உள்ளிட்ட பலப்பிரயோகத்தை மேற்கொண்டதால் நிலைமை மேலும் மோசமானது.

கொழும்பு - கண்டி பிரதான வீதியை இடைமறித்து களனிப் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. போக்குவரத்துக்குத் தடையாக போராட்டக்காரர்கள் செயற்பட்டமையால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்யவேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் அரசுக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பேரணியை முன்னெடுத்தனர்.

'ஒடுக்குமுறையை உடன் நிறுத்து, 'சிறைப்பிடித்தாலும் நாங்கள் வருகை தருவோம்', 'துப்பாக்கிப் பிரயோகம் செய்தாலும் நாம் வருவோம்', 'வீதிக்கு இறங்க நாம் அச்சம் கொள்ளமாட்டோம்' போன்ற கோஷங்களுடன் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-22)

### இயற்பியலுக்கான...

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறையில் உலகளாவியரீதியில் பங்களிப்பு செய்யும் சாதனையாளர்களுக்கு நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, இயற்பியலுக்கான நோபல் பரிசு இந்த வருடம் மூன்று விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அலைன் ஆஸ்பெக்ட், ஜான் எப்.கிளாசர், அன்டன் ஜெய்லிங்கர் ஆகிய மூவருக்கே இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மருத்துவத்துக்கான நோபல் பரிசு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அழிந்துபோன ஹோமினின்களின் மரபணுக்கள் மற்றும் மனித பரிணாமம் பற்றிய கண்டுபிடிப்புகளுக்காக சுவீடனைச் சேர்ந்த ஸ்வாண்டே பாபோவுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### நாடாளுமன்றத்தில்...

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் முடிவுகளுக்கு அமையவே ஜனாதிபதியின் நடாளுமன்ற உரை தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களைப் பெறுவதற்கான ஒப்பந்தங்கள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று கருதப்படும் நிலையில், நாணய நிதியத்தின் நிபந்தனைகள் இன்னமும் நாடாளுமன்றத்துக்கோ அல்லது நாட்டுக்கோ பகிரப்படவில்லை. இதனால், நாணய நிதியத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைவரங்கள் தொடர்பில் ஜனாதிபதி உரையாற்ற அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகின்றது.

அதேநேரம், அண்மையில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தின்படி அடுத்த இரு ஆண்டுகளுக்குள் இலங்கை நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான தனது நடவடிக்கைகளையும் வலுவாக நிலைப்படுத்த வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பிலும் ஜனாதிபதி உரையாற்றலாம் என்றும் கருதப்படுகின்றது.

அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பிலும் பல்கலைக்கழகங்களிலும் போராட்டங்கள் அண்மைக்காலமாக மீண்டும் தீவிரமாகி வருகின்றன. ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்தப் போராட்டங்களைத் தீவிரப்படுத்தி யிருந்தது. இத்தகையொரு பின்னணியிலும் ஜனாதிபதியின் உரை தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (அ-ம)

### சிமெந்தின்...

சிமெந்து உற்பத்தி நிறுவனங்கள் மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் கட்டட நிர்மாணப் பணியாளர்களுக்கு சலுகை வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு சத்துணவுக் கஞ்சி

கொழும்பு,ஒக். 5

பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சி வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் முதல் அனைத்துப் பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படுகின்றது என்று சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக ஆயிரம் பாடசாலைகளில் இவ்வாறு கஞ்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-இ)


## விற்பனை உதவியாளர் தேவை [பெண்கள்]

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.

**Note :-** யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**076 166 1986**

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள கடையொன்றிற்கு பெண் வேலையாள் தேவை.

• சம்பளம் - 35,000 • வயது-18-25

**0779370000**

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் தங்கிநின்று சமையல் வேலை வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

**0779370000**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து 200m தூரம்
- 20 அடிப்பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 லட்சம் ரூபா மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

**077 8748135**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 08 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.(50m தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீருற்று நிலம் நல்ல சூழல்
- வீடுகள். திருமண மண்டபங்கள் அமைக்க ஏற்ற இடம்.
- கைதடி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 6 லட்சம் ரூபா மட்டும்.

தரகர் தேவையில்லை . பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

**0779116983**
**0770760389**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- **076 755 8606**

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

**பொதிகள் கடிதங்கள் அனுப்பிட**

**11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு • UK 1700/- • SWISS 2700/-**

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகை

USA லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**திருமுருகன் கொம் நெற்**
**321 K.K.S Road, Jaffna** (முட்டாஸ் கடை சந்திக்க அருகாமை) **077 755 4528**

## Student Visa and Work Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

- Student Visa: UK, CANADA, FINLAND, SWEDEN, FRANCE AND AUSTRALIA
- Visitor / Tourist Visa: All Countries.
- Work Visa: UK and Canada.(Nurse, Chef, Farm workers, etc..)
- USA Lottery visa 2024 Opens on October 5, 2022

சகல விதமான online application செய்து தரப்படும்
(Appointments, online application etc......)



Call: 0770385584
Visa Consultant
134 Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Email: naltcjaffna@gmail.com

## புலமை கல்வி நிறுவனம்
## Pulamai Institute - Manipay

தரம் - 4 (தற்போது தரம் - 03) தரம் - 05 (தற்போது தரம் - 04) மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புதிய வகுப்புக்கள் விஜயதசமி அன்று ஆரம்பமாகின்றன.

**ஆசிரியர் : க. கலாமோகன்** (B.A, P.G.D.E, Dip.in.Tech..)

காலம் : 05.10.2022 புதன்கிழமை நேரம் : மாலை 4.00 மணியிலிருந்து

தொடர்புகளுக்கு : 077 212 1915
சோதி வேம்படிலேன், மானிப்பாய். (CS 21071) (3/6)

Note: மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் வழங்க உள்ளதால் உடன் பதிவுக்கு முந்துங்கள்.

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி **A9** பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை


**தரகர் தேவையில்லை.**

**தொடர்பு:- ஜெயம்**

**077 8147 389**
**077 2417 589**


# மரண அறிவித்தல்

மலர்வு
07 . 12 . 1934



உதிர்வு
25 . 09 . 2022

## திருமதி சரஸ்வதி கணேசராசா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, நல்லூர், மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சரஸ்வதி கணேசராசா அவர்கள் கடந்த 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தமபதிகளின் அன்பு மகளும், கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், கணேசராசா அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் கனகானந்தர் (ஆனந்தன்) அவர்களின் அன்புத்தாயாரும், நித்தி யேஸ்வரியின் அன்பு மாமியாரும், வனஜன் - கௌசிகா, அபிஷன் ஆகியோரின் பாச மிகு பேர்த்தியும், வினிஷ், விஷ்ணா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னபூரணம், கந்தசாமி, நித்தியானந்தன் மற்றும் இளைய தம்பி, லெட்சுமி, இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, கிருஸ்ணசாமி, விசுவலிங்கம், திருநாவுக்கரசு, தனபாக்கியம், பத்மநிதி மற்றும் தில்லைநாயகி, பரராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் பவானி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 10.00 மணிக்கு ரொரன்ரோ கனடாவில் நடைபெறும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு- அமரர். திருமதி சரஸ்வதி கணேசராசா அவர்களின் இறுதியாத்திரையினை http://livestream.com/accounts/1729214/events/10629675 என்ற Link ஊடாக 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 3.30 - 7.30 வரைக்கும் மற்றும் பிற்பகல் 07.00 – 10.00 மணிவரையும் (இலங்கை நேரம்) நேரடியாக பார்வையிடமுடியும்.

380/6, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (CS 21073) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org